
## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



மனிதன் எப்பொழுதும் ஏதாவது ஒரு செயலைச் செய்துகொண்டேதான் இருப்பான். ஒரு செயலும் செய்யாமல் அவனால் சும்மா இருக்க முடியாது. ப்ரக்ருதி (இயற்கை) குணங்களுக்கு வசப்பட்டு அவன் மூலமாக ஏதாவது செயல்கள் நடந்துகொண்டே இருக்கும்.

न हि कश्चित् क्षणमपि जातु तिष्ठत्य कर्मकृत् ।
कार्यत ह्ययशः कर्म सर्व: प्रकृति जैर्गुणैः ।
ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்ட²த்ய கர்மக்ரு’த் |
கார்யத ஹ்யயஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ரு’தி ஜைர்கு³ணை: ||

அந்தச் செயல்களை எப்படிச் செய்தால் நன்மையுண்டாகும். என்று சிந்தித்து அவன் செயல்பட வேண்டும். அதற்கு ஸத்ஸங்கம் (நல்லோர்களின் ஸஹவாஸம்) மிகவும் தேவை. நல்லோர்கள் ஸஹவாஸத்திலிருந்தால் புத்தியும் மனதும் தெளிவாக இருக்கும். மனதில் நல்ல சிந்தனைகளே உண்டாகும். நல்ல செயலையே செய்யத் தோன்றும். கெட்ட ஸஹவாஸம் கெட்ட செயல்களுக்குக் காரணமாகி மனிதனுக்கு மேன்மேலும் துன்பத்தையே அளிக்கும்.

सङ्गो य: संमृतेर्हेतुरसत्सु निहितोऽधिया ।
स एव साधुषु कृतो निःसङ्गत्वाय कल्पते ।।
ஸங்கோ³ ய: ஸம்’ம்ரு’தேர்ஹேதுரஸத்ஸு நிஹிதோ(அ)தி⁴யா |
ஸ ஏவ ஸாது⁴ஷு க்ரு’தோ நி:ஸங்க³த்வாய கல்பதே ||

சில சமயங்களில் நல்லவனுக்குக்கூட, 'இப்படிச் செய்தால் நல்லதா? அப்படிச் செய்தால் நல்லதா? என்ற குழப்பம் உண்டாகும். அப்பொழுது தன்னுடைய குருவிடம் அறிவுரை பெற்று அதன்படி நடக்கவேண்டும்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

இக்காலத்தில் பலரும் இதைக் குறித்து சிந்தனை செய்யாமல், நல்லது கெட்டதைப் புரிந்து கொள்ளாமல், கெட்ட ஸஹவாஸத்தில் சிக்கித் தவிக்கிறார்கள், யாருடைய செயலானது தர்மத்திற்காக, வைராக்யத்திற்காக (நிஷ்காம கர்மம் மூலமாக), பகவானின் திருவடிகளை ஸேவிப்பதற்காக, அமைவதில்லையோ, அவன் உயிருடன் இருந்தாலும் அவனை இறந்தவனாகத்தான் எண்ணவேண்டும் என்று, சாஸ்த்ரம் கூறுகிறது.

नेह यत्कर्मधर्माय न विरागाय कल्पते।
न तीर्थपदसेवायै जीवन्नपि मृतो हि सः ।।
நேஹ யத்கர்மத⁴ர்மாய ந விராகா³ய கல்பதே |
ந தீர்த²பத³ஸேவாயை ஜீவன்னபி ம்ரு’தோ ஹி ஸ꞉ ||

ஆகையால், அனைவரும் நல்லோர்களின் ஸஹவாஸத்திலேயே இருந்துவர வேண்டும் என்று கூறி எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

நன்றி - அம்மன் தரிசனம்

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அம்ருத துளிகள்

சாஸ்திரத்திலே “இந்த மாதிரி இருக்க வேண்டும், இந்த மாதிரி இருக்கக் கூடாது” என்று சொல்லி இருக்கிறது. இந்த விதி நிஷேதங்களை நாம் அனுஷ்டித்தால் நமக்குத்தான் சிரேயஸ் ஆகும். இதை உதாஸீனம் பண்ணினால் நமக்குத்தான் அசிரேயஸ், நாம் ஆசரிக்காமல் விட்டால் சாஸ்திரத்திற்கோ அல்லது சாஸ்திரத்தை உபதேசித்த ஈச்வரனுக்கோ ஒரு நஷ்டமும் இல்லை. அதே மாதிரி நாம் பள்ளியில் படிக்கிறோம். நம் ஆசிரியர், “நன்றாக படி, இந்த மாதிரி இருக்காதே; இந்த மாதிரி இரு” என்று சொல்லிய வண்ணம் செய்தால் நாம் பரீட்சையில் பாஸ் ஆகி அடுத்த வகுப்பிற்கு போவோம். அவர் சொன்ன மாதிரி செய்யவில்லையெனில் நாம் பரீக்ஷையில் ஃபெயில் ஆகி அங்கேயே உட்கார்ந்திருப்போம். நான் அவர் சொன்ன மாதிரி செய்தாலும் செய்யாவிட்டாலும் அவருக்கொன்றும் ஆகப்போவது இல்லை. அவருடைய காரியம் அவருக்கு நடந்து கொண்டே இருக்கிறது. அதேபோல், முன்னோர்கள் நமக்கு செய்த உபதேசங்கள் நம்முடைய சிரேயஸ்ஸிற்காக செய்த உபதேசங்களே ஆகும். அந்த உபதேசங்களை ஆசரிக்க வேண்டியது நமக்கு அவசியம்.

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

## காணாபத்யம்

**29.** த்ரிமுக கணபதி



ஸ்ரீமத்தீக்ஷ்ண ஸிகாங்குஸாக்ஷவரதாம்

தக்ஷே ததாந: கரை:

பாஸாம்ருத பூர்ணகும்ப-மபயம்

வாமே ததாநோ முதா

பீடே ஸ்வர்ணமயாரவிந்த விலஸத்

ஸத்கர்ணிகா பாஸுரே

ஆஸீநஸ்த்ரிமுக: பலாஸருசிரோ

நாகாநந: பாதுந:

கூர்மையான அங்குசம், அக்கமாலை, வரதமுத்திரை ஆகியவை மூன்று வலக்கரங்களில் ஒளிவீச, பாசம், அமுத கலசம், அபயம் இடக்கரங்களில் மின்ன, அழகான கர்ணிகையுடன் ஒளி வீசும் தங்க மயமான தாமரைப்பீடத்துடன் கூடியவரான, செந்நிறத் திருமேனியும், மூன்று முகங்களும் உடையவரான மும்முக கணபதி என்னைக் காப்பாற்றுவராக.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

**30.** ஸிம்ஹ கணபதி



வீணாம் கல்பலதாம் அரிஞ்ச வரதம்

தக்ஷே விதத்தே கரை:

வாமே தாமரஸஞ்ச ரத்நகலசம்

ஸந்மஞ்ஜரீ சாபயம்

ஶுண்டாதண்டலஸந் ம்ருகேந்த்ரவதந:



ஸங்கேந்துகௌர: ஶுப:

தீவ்யத் ரத்ந நிபாம்ஶுகோ கணபதி:

பாயாதபாயாத் ஸந:

வீணை, கற்பகக்கொடி, ஸிம்ஹம், வரதம் ஆகியவை வலக்கரங்களிலும், தாமரை, ரத்ந கலசம், மலர்க்கொத்து, அபய முத்திரை ஆகியவை இடக்கரங்களிலும் தாங்கி, தடி போன்ற துதிக்கையுடன் விளங்குகின்ற ம்ருகேந்த்ர முகம் கொண்ட, சங்கு போன்ற (வெண்ணிறமுடைய) சந்த்ரனைத் தரித்த, உயர்வான ரத்நம் போன்ற ப்ரகாசமான ஆடையை அணிந்தவரான ஸிம்ஹ கணபதியை முறையோடு எப்போதும் துதிக்கிறேன்.

(தொடரும்...)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹஸ்வாமிகள்)

## ஸ்ரீ வித்யையின் ஶக்தி




இருப்பை இரண்டு வழிகளில் கற்பனை செய்யலாம் – அதாவது குணங்களுடன் (ஸகுண) மற்றும் குணங்கள் இல்லாமல் (நிர்குண). ஸத் சித் ஆனந்த ஶக்தி தகுதி வாய்ந்த உயர்ந்த மனிதரிடமிருந்து தோன்றியது. ஶக்தி-யிலிருந்து நாதம் (ஒலி) தோன்றியது, ஒலியிலிருந்து மஹாபிந்து. இந்த மஉச்ச ஹாபிந்து, பிந்து, நாதம் மற்றும் பீஜம் (விதை) என மூன்று பகுதிகளாகப் பிரிந்தது. பிந்து ஶிவன், பீஜம் ஶக்தி. அவர்களின் சேர்க்கை நாதம். ஸ்ரீவித்யா நடைமுறையில் இது போன்ற மூன்று மடங்குகளாக இது மறைமுகமாக குறிப்பிடப் பட்டுள்ளது:

- ப்ரகாஶம், விமர்ஶம் மற்றும் மிஶ்ரம்
- ரக்தம், ஶுக்லம் மற்றும் மிஶ்ர சரணம்
- சந்த்ரன், அக்னி மற்றும் ஸூர்யன்
- இச்சா, ஞான மற்றும் க்ரியா ஶக்திகள்
- ப்ரஹ்மா, விஷ்ணு மற்றும் ருத்ரன்

இந்த மும்மூன்றுகள் ஒரு முக்கோணத்தின் மூன்று உச்சிகளாக கருதப் படுகின்றன. இந்த முறையின்படி சூரியனுக்கு காம என்றும், மற்ற இரண்டு (சந்திரனும் நெருப்பும் ஒன்றாக) கலா என்றும் அழைக்கப்படுகிறது. எனவே இந்த குழுவின் ரகசிய பெயர் காமகலா. எனவே மூன்று புள்ளி வடிவ எழுத்து 'ஈ' (ஸ்ரீ லலிதா ஸஹஸ்-ரநாமத்தில் 712-ஆவது பெயர்) – காமகலா அக்ஷரம் என்றே அழைக்கப் படுகின்றது. ஸ்ரீதேவி உபாசனையில், ஸ்ரீசக்ர பூஜை, ஸ்ரீவித்யா ஜபம் மற்றும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் ஆகிய மூன்றும் முக்கிய கூறுகள்.

ஸ்ரீ ஆதி ஶங்கரர் அறிவுறுத்திய அத்வைத கோட்பாட்-டின்படி, மாயை அகற்றப்பட்டால் மட்டுமே ப்ரஹ்மத்தின் அறிவைப் பெற முடியும். (பல வகையான நடைமுறை-களைக் குறிப்பிடலாம் – இருள் எரிந்தவுடன் அல்லது அறிவு கிடைத்தவுடன் அறியாமை மற்றும் மாயை நீக்கப் படுவது போல). ஸ்ரீவித்யா நடைமுறையின் படி மாயை என்பது ப்ரஹ்மத்தின் ஶக்தி மட்டுமே. இது தொடர்பாக ஸ்ரீ காஞ்சி காமகோடி பரமாச்சார்யர்-ன் பேச்சையும் (தெய்வதின் குரல், 6-ஆவது தொகுதி) குறிப்பிடலாம்.


(தொடரும்…)



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

## 5. உத்தரதேச யாத்திரை

இவ்விதம் சிருங்கேரியில் ஸ்ரீமத் ஆசார்யார் இருந்து வருகையில், 1885 டிஸம்பர் 7-ல் மைஸூர் மஹாராஜா சாமராஜ உடையாரவர்கள், திவான் ஸர் கே.சேஷாத்திரி அய்யர், பிரிட்டிஷ் ரெஸிடெண்டு கர்லெஸ்ட் துரை முதலான பரிவாரங்களுடன் சிருங்கேரிக்கு வந்து இரண்டு நாள் தங்கி தர்சனம் செய்தார்கள். அந்த சமயம் ஸ்ரீ சாரதாம்பாள் ஸன்னிதியில் ஸ்ரீமத் ஆசார்யார் ஓர் அழகான விலையுயர்ந்த ரத்ன கிரீடத்தை மஹாராஜாவின் சிரஸில் தன் கைகளாலேயே தாரணம் செய்வித்து விசேஷமாக அனுக்ரஹித்தார்கள்.



கொஞ்ச நாள் சென்று, ஏற்கெனவே ஸ்ரீ வித்யாசங்கரர் ஆலயத்திற்கு ஸ்வர்ணத்தில் பஞ்ச கலசம் செய்து ஸமர்ப்பணம் செய்திருந்த ஜாகீர்தார் அண்ணா ஸாகிப் விஞ்சுருகர் என்ற பிரபு சிருங்கேரிக்கு வந்து ஸ்ரீமத் ஆசார்யாரை தர்சித்து, உத்தரதேச யாத்திரையாக விஜயம் செய்யவேண்டுமென்று மிகவும் பிரார்த்தித்துக் கொண்டார். தானாக ஒருவித ஸங்கல்பத்தையும் செய்வதில்லை யென்று வைத்துக் கொண்டிருக்கிற நியமத்தை அனுஸரித்து தன்னுடைய குருநாதர் அதிஷ்டானத்திற்கு சென்று அந்த ஸந்நிதியிலும் ஸ்ரீசாரதாம்பாள் ஸந்நிதியிலும் உத்தரவு கேட்டதில் நல்ல ஸூசனங்கள் ஏற்பட்டன. அத்துடன் தான் பிரதி தினமும் பூஜை செய்துகொண்டிருக்கிற குருநாதர் ஸமாதி லிங்கத்தின் ஆவுடையார் பீடத்தின் பேரில் யாருக்கும் தெரியாமல் ஒருநாள் ஒரு சிறு பாணலிங்கம் இருக்கக்கண்டார். ஸமாதி லிங்கத்தின் பிரதிநிதியாக இந்த லிங்கத்தை எடுத்துக் கொண்டுபோய் யாத்திரை செய்யும்படி ஆக்ஞாபித்ததாகத் தோன்றிற்று.

உடனே வேண்டிய ஏற்பாடுகளை செய்துகொண்டு, பார்த்திவ வருஷம் மாகசுக்ல பஞ்சமீ (5-2-1886) தினம் சிருங்கேரியிலிருந்து யாத்திரையாக புறப்பட்டு, ஸமீபத்திலுள்ள ஸச்சிதானந்தபுரமென்கிற அக்ரஹாரத்திற்கு விஜயம் செய்தார்கள். பிறகு சிவமொக்கா ஜில்லாவில் சிலகாலம் ஸஞ்சாரம் செய்துவிட்டு, குருநாதர் தேஹ வியோக காலத்தில் ஸங்கல்பித்த கோகர்ண யாத்திரையை செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் பனவாசி, சிரஸி வழியாக கோகர்ணத்திற்கு விஜயம்செய்து ஸ்ரீ மஹாபலேசுவர ஸ்வாமியை தர்சனம்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

செய்து அங்குள்ள சிருங்கேரி மடத்தில் தங்கினார்கள். அப்பொழுது மஹா சிவராத்திரி தினம் மூன்றாவது யாமம் நடுநிசியில் தேவாலயம் சென்று ஸாவகாசமாக பரமானந்தத்துடன் விசேஷமாக பூஜை செய்து முக்தாஹாரம்,ருத்ராக்ஷ கண்டி, வஸ்திரங்கள் முதலானவைகளை அர்ப்பணம் செய்தார்கள். இரண்டு மாஸகாலம் அங்கே தங்கிவிட்டு, பிறகு தார்வார் வழியாகச் சென்று, பம்பாய் ராஜதானியில் அநேக ஸ்தலங்களுக்கு விஜயம் செய்தார்கள்.

அந்த ஸமயம் ஜம்கண்டி ஸம்ஸ்தானத்தில் ராஜாவாயிருந்த ராமசந்திரராவ் அப்பா ஸாகெப் என்பவர் மிகவும் ஆவலுடன் ஸ்ரீ ஸ்வாமிகளை பிரார்த்தித்ததின் பேரில் 1887வருடம் ஸெப்டம்பர் 16உ காலையில் உபய ஸம்ஸ்தான பிருதாவளிகளுடன் ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் ஜம்கண்டியில் பிரவேசம் செய்தார்கள். ஊருக்கு ஒன்றரை மைலுக்கு வெளியிலேயே எதிர்கொண்டு அழைக்க வந்த ராஜா ஸ்ரீமத் ஆசார்யாரின் முதல் தர்சனத்திலேயே பரவசமாகிவிட்டார். தன் ராஜதானியில் சிலகாலம் ஸ்ரீ ஸ்வாமிகளை இருக்கச் செய்து வெகு பக்தியுடன் பூஜித்துவந்தார். சுமார் 12000 ரூபாய் மதிப்புள்ள ஒரு வஜ்ஜிரகண்டியை ஸ்வாமிகளுக்கு அர்ப்பணம் செய்தார். பிரதி வருஷமும் சிருங்கேரியில் ஸ்ரீ சாரதாம்பாள் நவராத்திரி உத்ஸவத்தில் மூலநக்ஷத்திர தினத்தில் நடத்தப்படுகிற எல்லா செலவும் தன் ஸம்ஸ்தானத்தியதாக இருக்கவேண்டுமென்று பிரதி வருஷமும் ரூ.1000 பரம்பரையாக அனுப்பிவருவதாகக் கண்டு ஸ்ரீ ஸ்வாமிகளவர்களிடம் விக்ஞாபனப் பத்திரிகை மூலம் தெரியப்படுத்திக் கொண்டார்.

பின்னால் இவர் யாத்திரை மத்தியில் பல்லாரிக்கு தன் புத்திரர் ஸகிதம் வந்து தங்க நாணயங்களால் பாத பூஜை செய்ததுடன் சிருங்கேரிக்கு வந்து வெள்ளியில் ஒரு திவ்யமான பத்ராஸனத்தையும் அர்ப்பணம் செய்து, அதில் ஏறும்போது தன் புத்திரன்பேரில் பாதஸ்பர்ச மேற்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்படியே அனுக்ரஹித்து ராஜாவுக்கும். அவர் குமாரருக்கும் ராஜார்ஹமான மரியாதை செய்து அனுப்பினார்கள்.

ஜம்கண்டியிலிருந்து புறப்பட்டு மீராஜ், சாங்க்லி, குருந்துவாட முதலான ஸம்ஸ்தான அரசர்களின் பிரார்த்தனைக்கிணங்கி, அங்கங்கே ராஜாக்களுக்கும், பிரஜைகளுக்கும் அனுக்ரஹம் செய்து கொண்டு கொல்லாபுரம் போய் மஹாலக்ஷ்மீ தர்சனம் செய்து கொண்டு அவ்வூரிலிருக்கும் சங்கேசுவரமடம் ஸ்வாமிகளால் அழைக்கப்பட்டு அம்மடத்திற்கு விஜயம் செய்து விசேஷ ஸத்காரத்தையடைந்து அனுக்ரஹம் செய்தார்கள். கொல்லாபுரத்தில் வாஸம் செய்யும்போது அநேகமாய் தினந்தோறும் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே உபந்யாஸம் செய்து சிஷ்யமண்டலிக்கு அனுக்ரஹம் செய்தார்கள். அந்த தேசத்திய ஜனங்களின் பக்தி விச்வாஸங்களைக் கண்டு மிகவும் ஸந்தோஷித்தார்கள்.

(தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## ॥ श्रीगणेशपञ्चरत्नम् ॥
## ஸ்ரீகணேச பஞ்சரத்னம்

समस्तलोकशंकरं निरस्त दैत्य कुञ्जरं
दरेतरोदरं वरं वरेभवक्त्रमक्षरम् ।
कृपाकरं क्षमाकरं मुदाकरं यशस्करं मनस्करं
नमस्कृतां नमस्करोमि भास्वरम् ॥ ३ ॥

ஸமஸ்தலோகஶங்கரம்' நிரஸ்த தை³த்ய குஞ்ஜரம்'
த³ரேதரோத³ரம்' வரம்' வரேப⁴வக்த்ரமக்ஷரம் |
க்ரு'பாகரம்' க்ஷமாகரம்' முதா³கரம்' யஶஸ்கரம்' மனஸ்கரம்'
நமஸ்க்ரு'தாம்' நமஸ்கரோமி பா⁴ஸ்வரம் ||3||



யானை முகமும் பெரும் வயிறும் கொண்ட கணேசரை வணங்குபவர்களுக்கு மனம் நிர்மலமாவதோடு புகழும் ஸந்தோஷமும் உண்டாகும். இரக்கம் காட்டி செய்த குற்றங்களைப் பொறுத்துக்கொள்வார். கஜாஸுரனைத் தொலைத்து உலகிற்கு நன்மை செய்தவர். (3)

अकिंचनार्तिमार्जनं चिरन्तनोक्तिभाजनं
पुरारिपूर्वनन्दनं सुरारिगर्वचर्वणम् ।
प्रपञ्चनाशभीषणं धनञ्जयादिभूषणं
कपोलदानवारणं भजे पुराणवारणम् ।। ४ ।।

அகிஞ்சனார்திமார்ஜனம்'
சிரந்தனோக்திபா⁴ஜனம்'
புராரிபூர்வநந்த³னம்' ஸுராரிக³ர்வசர்வணம் .
ப்ரபஞ்சநாஶபீ⁴ஷணம்' த⁴னஞ்ஜயாதி³பூ⁴ஷணம்'
கபோலதா³னவாரணம்' ப⁴ஜேம்' புராணவாரணம் .. 4 ..

ஏழைகளுக்கு எல்லா ஐசுவர்யங்களையும் கொடுத்துத் துன்பங்களைப்போக்குபவர். ஈசுவரனுடைய மூத்த புதல்வர். ஸ்கந்தருக்கு அண்ணா. பாம்புகளை அணிகளாகக்கொண்டு கன்னங்களில் மதஜலம் பெருக நிற்கும் கணபதி அசுரர்களுக்குத் தோல்வியைக்கொடுத்து அவர்களுடைய கர்வத்தை அடக்குபவர். பிரளய காலத்தில் பயங்கர உருவத்துடன் பிரபஞ்சத்தை அழிக்கும் அனாதியான இவருடைய மஹிமையை மிகப்பழமையான வேதங்களில் தான் காணமுடியும். (தொடரும் …)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)


# || श्री मीनाक्षी स्तोत्रम् ||

ஸ்ரீ மீனாக்ஷி ஸ்தோத்ரம்
(ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் உள்ள ஸ்தோத்திரம்.)

या देवी जगतां कर्त्री शंकरस्यापि शंकरी |
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||1||
யா தே³வீ ஜக³தாம்' கர்த்ரீ ஶங்கரஸ்யாபி ஶங்கரீ |
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||1||

எந்த தேவியானவள் உலகங்களை உண்டு பண்ணினாளோ, எவள் ஸ்ரீ சங்கரருக்கும் ஸுகத்தை அளிப்பவளோ, அந்த தேவியும், மங்களத்தையே உருவமாய் கொண்டவளுமான ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம்.

सकृदाराध्य यां सर्वं अभीष्टं लभते जनः |
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||2||
ஸக்ரு'தா³ராத்⁴ய யாம்' ஸர்வம்' அபீ⁴ஷ்டம்' லப⁴தே ஜனः |
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||2||



மனிதன் எந்த தேவியை ஒரு முறை ஆராதித்து எல்லா அபீஷ்டங்களையும் அடைகிறானோ, அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் கொண்டவளுமான ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம்.

यस्याः प्रसाद लेशेन भोग मोक्षौ न दुर्लभौ |
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||3||
யஸ்யாः ப்ரஸாத³ லேஶேன போ⁴க³ மோக்ஷௌ ந து³ர்லபௌ⁴ |
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||3||

எந்த ஸ்ரீ அம்பாளின் ப்ரஸாத லேஸத்தினால் போக மோக்ஷங்களை அடைவதும் சுலபமோ, அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் கொண்டவளுமான ஸ்ரீமீனாக்ஷிக்கு நமஸ்காரம்.

यया शिवोपि युक्तस्सन् पञ्चकृत्यं करोति हि |
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||4||
யயா ஶிவோபி யுக்தஸ்ஸன் பஞ்சக்ரு'த்யம்' கரோதி ஹி |
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||4||

ஸ்ரீசிவனும் எந்த தேவியுடன் கூடினவராய், பஞ்சு க்ருத்யங்களை செய்கிறாரோ, அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம்.
(தொடரும்...)

**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**
An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्रीमन्नारायणीयम्

## ஸ்ரீமந்நாராயணீயம்

### चतुर्थ दशकम्
நாலாவது தசகம் -அஷ்டாங்க யோகம்

कल्यतो मम कुरुष्व तावतीं कल्पते भवदुपासनं यया ।
स्पष्टमष्टविध - योग वर्यया पुष्टयाऽऽशु तव तुष्टिमाप्नुयाम् ||**1**||
கல்யதோ மம குருஷ்வ தாவதீம்’ கல்பதே ப$^{4}$வது$^{3}$பாஸனம்’ யயா .
ஸ்பஷ்டமஷ்டவித$^{4}$ - யோக$^{3}$ வர்யயா புஷ்டயா(ஆ)ஶு தப$^{3}$ துஷ்டிமாப்னுயாம் ||1||



ஹே! குருவாயூர் அப்பா! உமது உபாஸனை செய்வதற்கு வேண்டிய உடல் நலத்தைக் கொடுத்தருளப் பிரார்த்திக்கிறேன். அப்பொழுது நிச்சயமாக அஷ்டாங்க யோகத்தைச் செய்து விரைவில் உம்முடைய அருளைப் பெறுவோம்.

ब्रह्मचर्य दृढतादिभि - र्यमै - राप्लवादि - नियमेश्च पाविताः ।
कुर्महे दृढममी सुखासनं पंकजाद्यमपि वा भवत्पराः ॥ **2** ॥
ப்$^{3}$ரஹ்மசர்ய த்$^{3}$ரு’ட$^{4}$தாதி$^{3}$பி$^{4}$ - ர்யமை - ராப்லவாதி$^{3}$ - நியமேஶ்ச பாவிதா: |
குர்மஹே த்$^{3}$ரு’ட$^{4}$மமீ ஸுகா$^{2}$ஸனம்’ பங்கஜாத்$^{3}$யமபி வா ப$^{4}$வத்பரா: ||2||

ஹே! குருவாயூர் அப்பா! திடமான பிரம்மசரியம் முதலிய யமத்தாலும் ஸ்நானம் முதலிய நியமங்களாலும் பாவனமாகி ஸுகாஸனமோ அல்லது பத்மாஸனம் முதலியவையோ நன்றாகச் செய்வோம். (யமம், நியமம், ஆஸனம் )

तार मन्तर - मनुचिन्त्य सन्ततं प्राणवायु मभियम्य निमलाः ।
इन्द्रियाणि विषयादथापहृत्याऽऽस्महे भवदुपासनोन्मुखाः ॥ **3** ॥
தார மந்தர - மனுசிந்த்ய ஸந்ததம்’ ப்ராணவாயு மபி$^{4}$யம்ய நிமலா: |
இந்த்$^{3}$ரியாணி விஷயாத$^{3}$தா$^{2}$பஹ்ரு’த்யா(ஆ)ஸ்மஹே ப$^{4}$வது$^{3}$பாஸனோன்முகா$^{2}$: ||3||

ஹே! குருவாயூர் அப்பா! பிரணவத்தை இடைவிடாது ஸ்மரித்துக்கொண்டு பிராணா யாமம், செய்து பரிசுத்தர்களாகி, இந்திரியங்களை அதனதன் விஷயங் களிலிருந்து திருப்பி உமது உபாஸனையில் ஈடுபடுவோம். (ப்ராணா யாமம், ப்ரத்யாஹாரம்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

अस्फुटे वपुषि ते प्रयत्नतो धारयेम धिषणां र्मुहुमुहुः ।
तेन भक्तिरस - मन्तरार्द्रता - मुद्वहेम भवदंघ्रि चिन्तकाः ॥ 4 ॥

அஸ்பு²டே வபுஷி தே ப்ரயத்னதோ தா⁴ரயேம
தி⁴ஷணாம்' ர்முஹுர்முஹு: |
தேன ப⁴க்திரஸ - மந்தரார்த்³ரதா -
முத்³வஹேம ப⁴வத³ங்க்⁴ரி சிந்தகா: || 4 ||




ஹே! குருவாயூர் அப்பா! உம்முடைய திவ்யரூபம் தெளிவாய் மனதில் விளங்காத பொழுது முயற்சி செய்து அடிக்கடி தாரணை செய்வோம். அப்படி உமது திருவடிகளை தியானித்து பக்திரஸத்தையனுபவித்து உள்ளத்தை நெகிழச் செய்வோம். (தாரணை, தியானம்)

विस्फुटावयव - भेद - सुन्दरं त्वद्वपुस्सुचिर - शीलनावशात् ।
अश्रमं मनसि चिन्तयामहे ध्यानयोग - निरतास्त्वदाश्रयाः ॥ 5 ॥


விஸ்பு²டாவயவ - பே⁴த³ - ஸுந்த³ரம்'
த்வத்³வபுஸ்ஸுசிர - ஶீலனாவஶாத் |
அஶ்ரமம்' மனஸி சிந்தயாமஹே த்⁴யானயோக³
- நிரதாஸ்த்வதா³ஶ்ரயா: ||5||

ஹே! குருவாயூர் அப்பா! உம்மை அடைந்த நாங்கள் தியானயோகத்தில் ஆழ்ந்து நீண்டகால அப்பியாஸ வசத்தால் மிகவும் தெளிவாக வெவ்வேறு அவயவங்களின் அழகை அனுபவித்து உமது திருமேனியை சிரமமில்லாமல் மனதில் தியானித்துக் கொண்டே இருப்போம்.

(தொடரும்….)



# Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ||ஸிவபக்தி கல்பலதிகா||

ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாள்

श्रीकान्तपद्मजमुखैर्हृदिचिन्तनीयं श्रीमत् क्व शङ्कर भवच्चरणारविन्दम् ।

क्वाहं तदेतदुपसेवितुमीहमानो हा हन्तकस्य न भवाम्यपहासपात्रम् ।।

ஸ்ரீகாந்தபத்3மஜமுகை2ர்ஹ்ருதி3சிந்தனீயம்' ஸ்ரீமத் க்வ ஶங்கர ப4வச்சரணாரவிந்த3ம் |

க்வாஹம்' ததே3தது3பஸேவிதுமீஹமானோ ஹா
ஹந்தகஸ்ய ந ப4வாம்யபஹாஸபாத்ரம் ||



ஹே ஸங்கர (மங்களத்தைச் செய்பவரே) ! லக்ஷ்மீ மணாளனான விஷ்ணு தாமரையில் உதித்த பிரம்மா முதலிய (தேவர்கள்) வர்களால் : இதயத்தில், தியானிக்கத்தக்க பெருமை மிக்க உமது திருவடித்தாமரை எங்கே அதனை வழிபட முயன்று வருகிற நான் எங்கே , ஐயோ (அப்படிப்பட்ட நான்) எவனுடைய - கேலிக்கும் உரியவனாக ஆகாமலிருப்பேனா ? (எல்லோருக்கும் கேலிப் பொருளாவேனா?)

अद्राक्षमङ्घ्रिकमलं न तवेति यन्मे दुःखं यदप्यनवमृश्य दुरात्मतां स्वाम् ।

पादाम्बुजं तव दिदृक्ष इतीदृगागः पातोऽनले प्रतिकृतिर्गिरिशैतयोर्मे ||

அத்3ராக்ஷமங்க்4ரிகமலம்' ந தவேதி யன்மே து3:க2ம்' யத3ப்யனவம்ரு'ஶ்ய து3ராத்மதாம்' ஸ்வாம் |

பாதா3ம்பு3ஜம்' தவ தி3த்3ரு'க்ஷ இதீத்3ரு'கா3க3: பாதோ(அ)னலே
ப்ரதிக்ரு'திர்கி3ரிஶைதயோர்மே ||

மலைவாழ் சிவபெருமானே ! கமலம் போன்ற உமது திருவடித்தாமரையை நான் காணவில்லை (கண்டதில்லை என்ற ஏக்கம் ) , எனக்கு எந்த துக்கம் உண்டோ , அது என்னுடைய தீயதான உள்ளத்தை நன்குணராததால், வந்தது உனது திருவடித்தாமரையை காணவிரும்புகிறேன் என்பது கொடிய பாபமே. இவ்விரண்டு பாபங்கட்கும், மன்னிப்புக் கேட்கும் செயல் என்ற பரிகாரம் நெருப்பில் விழுவதே. (தொடரும்...) Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்